**செ.வெ. எண்: 53** **நாள்: 20.01.2012**

# செய்தி வெளியீடு

ஒரு நாட்டின் பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாதது துறைமுகங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. துறைமுக மேம்பாடும், தொழில் வளர்ச்சியும் ஒன்றொடொன்று இணைந்துள்ளதால், பொது-தனியார் கூட்டமைப்பின் மூலம் சிறு துறைமுகங்களை மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், நாகப்பட்டினத்தில் உள்ள துறைமுகத்தினை பொது-தனியார் கூட்டாண்மை அடிப்படையில் 380 கோடி ரூபாய் செலவில் அனைத்து பருவ கால நிலைக்கேற்ப ஆழ்கடல் கப்பலனை மற்றும் பசுமை சூழலுடன் கூடிய துறைமுகமாக (All weather, deep water, direct berthing, Green field Port) மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இத்துறைமுகம் மேம்படுத்தப்பட்டு அதனுடைய செயல்பாடுகள் துவங்கும் முதல் ஆண்டில் சுமார் 10 லட்சம் டன் சரக்குகள் கையாளப்பட்டு, அதன் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 20 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். இது படிப்படியாக வளர்ச்சி பெற்று 25ஆம் ஆண்டில் சுமார் 60 லட்சம் டன் சரக்குகள் கையாளும் நிலைக்கு உயரும். அதன் மூலம் சுமார் 120 கோடி ரூபாய் வருவாய் கிடைக்க வழிவகை ஏற்படும்.

தமிழகத்தின் மையப் பகுதியில் உள்ள இந்த துறைமுகத்தின் மேம்பாட்டினால், இதன் சுற்றுப்புறப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு தேவையான அத்தியாவசிய துறைமுக இணைப்பு வசதி இதன் மூலம் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். மேலும், இத்திட்டத்தின் மூலம் தொழில் வளர்ச்சியில் பின் தங்கியுள்ள இப்பகுதிகளில் அதிக வேலைவாய்ப்பு வசதியும், பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 20.1.2012